# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 62/2016

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | பி. ராஜாமணி | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பரமசிவம் | தொழில் | .. | இல்லாள் |
| வயது | .. | 47 | ஜாதி | .. | வன்னியர் |
| கிராமம் | .. | தேவண்ணக் கவுண்டனூர் | நாள் | .. | 10.11.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திருமதி.பி. ராஜாமணி என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.2 – பி. ராஜாமணி - பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

உங்களுக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால், எனக்கு 46 வயதாகிறது. எனக்கு 14 வயதாகும்போது திருமணம் ஆகிவிட்டது என்று சொன்னால், சரியல்ல, எனக்கு 18 வயதில்தான் திருமணம் ஆனது. கடந்த 30 வருடங்களாக சேலம் சீலநாய்க்கன்பட்டி அருகே காட்டுர் என்ற பகுதியில் எனது கணவருடன் வசித்து வருகிறேன் என்றால், சரிதான், தற்போது ஒரு வருடமாக எனது அம்மா வீட்டில்தான் இருக்கிறேன். நான் எனது அம்மா தற்போது வசித்து வருகிறேன் என்று கூறுவது உண்மையில்லைஎன்றாலும், வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. உங்கள் தகப்பனாரின் பெயர் அய்யமுத்து என்றால், சரிதான். 13.05.1994 அன்று ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படிதான் எனது தகப்பனாருக்கு வழக்கு சொத்து வந்தடைந்தது என்றால், சரிதான். 13.05.1994 பாகப்பிரிவினை பத்திரத்தில் A செட்டியூல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தான் எனது தகப்பனாருக்கு சேர வேண்டியது என்று சொன்னால், எனக்கு நியாபகம் இல்லை. எனது தகப்பனார் 04.06.2005 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றால், சரிதான். எனது தகப்பனாருக்கு முதலாம் வாதியாகிய எனது தாயார், இரண்டாம் வாதியாகிய எனது சகோதரர், மூன்றாம் வாதியாகிய நான் மற்றும் இரண்டாம் பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால், சரிதான். எனது தகப்பனார் சங்ககிரியில் சிமெண்ட் பேக்டரியில் வேலை

செய்து வந்தார் என்றால், சரிதான். அவர் வேலையிலிருந்து எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. சிமெண்ட் பேக்டரியில் வேலைசெய்து கொண்டு, எனது தகப்பனார் அனைத்துவித வசதிகளோடுதான் வாழ்ந்து வந்தார் என்றால், சரிதான். இரண்டாவது வாதி அருள் குமார் என்பவர் சேலத்தில்தான் வசித்து வருகிறார் என்றால், சரிதான். இரண்டாம் பிரதிவாதி அவர் மாமியார் வீடான செட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால், அது குறித்து எனக்குத் தெரியாது. எனது தாயார் 2008 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு இரண்டாம் வாதி மற்றும் என்னுடன் மாறிமாறி உடனிருந்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டேன் என்று சொன்னால், சரிதான். பிரதிவாதிகள் தாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 13.05.1994 பாகப்பிரிவினை பத்திரப்படி A செட்டியூலில் 97.5 செண்ட் நிலம் என்று நில அளவீடு கூறியிருந்தாலும், உண்மையில் அங்கு 92 செண்ட் நிலம் மட்டுமே பூஸ்துதியில் உள்ளது என்று கூறியுள்ளார்கள் என்று சொன்னால், சரிதான். நில அளவு குறித்த வேறுபாட்டை அறிந்து கொள்வதற்கு நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரிதான். நான் மற்றும் மற்ற வாதிகள், இரண்டாம் பிரதிவாதி சேர்ந்து 04.02.2008 ஆம் தேதியன்று ஒரு சாந்தா என்பவருக்கு சொத்துக்களை விற்க வேண்டி, பொது அதிகார பத்திரம் அளித்துள்ளோம் என்றால், சரிதான். சர்வே எண்.618 என்பது பஞ்சாயத்து ரோட்டுக்கு உரியது என்றால், சரிதான். அந்த பஞ்சாயத்து ரோட்டிற்கு கிழபுறமாகத்தான் எங்கள் தகப்பனாருக்கு பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்து உள்ளது என்று சொன்னால், சரிதான். எங்கள் பொது அதிகார முகவரான சாந்தா என்பவர் பழனிவேல் என்பவருக்கு, பொது அதிகாரம் கொடுத்த சொத்தில் 50 செண்ட் நிலத்தை விற்றுள்ளார் என்றால், சரிதான். அந்த விற்பனை ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.9 இன் படி முதலாம் பிரதிவாதி சேகர் என்பவருக்கு ஐ. வெங்கடேசன் என்பவர் 11 செண்ட் நிலத்தை வீடு பாகம் உட்பட கிரையம் செய்து கொடுத்தார் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. முதலாம் பிரதிவாதி 11 செண்ட் நிலத்தை வெங்கடேஸ்வரன் என்பவரிடமிருந்து பஞ்சாயத்து ரோட்டை ஒட்டி கிழபுறமாக தார்சு வீட்டை உள்ளடக்கி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால், அது குறித்து எனக்குத் தெரியாது. பாலசுப்ரமணி என்பவருக்கு வெங்டேஸ்வரன் என்பவர் 31 செண்ட் நிலத்தை கிரையம்

செய்து கொடுத்துள்ளார் என்றால், சரிதான். பழனிவேல் என்பவருக்கு 50 சென்ட் நிலமும் மற்றும் பாலசுப்ரமணி என்பவருக்கு 31 சென்ட் நிலமும், மற்றும் முதலாம் பிரதிவாதிக்கு 11 சென்ட் நிலமும் ஆக எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 92 சென்ட் நிலமும் மேற்கண்ட மூவருக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால், இன்னும் 5.5 சென்ட் நிலம் உள்ளது. நான் தனியாக 5.5 சென்ட் நிலம் உள்ளது என்று சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு உள்ள நிலம் 11 சென்ட் நிலத்திலேயே அடங்கி விட்டது என்று சொன்னாலும், சரியல்ல. வழக்குரையில் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல், அந்த குடும்ப ஏற்பாடு என்பது குறித்து ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தி கொண்டீர்களா என்றால், இல்லை. தற்போது சாட்சி அந்த குடும்ப ஏற்பாடு குறித்து எங்களிடம் பத்திரம் உள்ளது என்று கூறுகிறார். அவ்வாறு கூறப்படும் ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால், பதிவு செய்யப்பட்டதுதான். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றாலும், தற்போது நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நாங்கள் தாவா வழக்கு சொத்தாக காட்டப்பட்டுள்ள 5.5 சென்ட் என்பது பூஸ்துதியில் இல்லாத சொத்து என்றும், உண்மையில் 92 சென்ட் நிலம் மட்டுமே எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு, அதில் 51 சென்ட், 30 சென்ட், 11 சென்ட் என்று கிரையம் மூலம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், நாங்கள் தாவாவில் கூறுவதுபோல் எந்த சொத்தும் பூஸ்துதியில் இல்லை என்று சொன்னால், சரியல்ல. முதலாம் பிரதிவாதி கிரையம் பெற்ற 11 சென்ட் நிலத்திற்குள்தான் நான் கூறியுள்ள தார்சுவீடு அமைந்துள்ளது என்றாலும், கிரையம் பெற்ற தேதி முதல் அந்த சொத்துக்களை முதலாம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றாலும், அந்த சொத்திற்கு உண்டான வருவாய் ஆவணங்களை அவர் பெயருக்கு மாற்றி உள்ளார் என்றாலும், வீட்டுவரி, மின் இணைப்பு அவர் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றாலும், அனைத்தும் தெரிந்து கொண்டு அதை மறைத்துக்கொண்டு, துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்திலும், முதலாம் பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் 5.5 சென்ட் நிலத்தில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 4.5 சென்ட் நிலம் மட்டும் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். மீதி 1 சென்ட் நிலம் இரண்டாம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். எங்கள் பிராதுபடி எங்களுக்கு உரிமையுள்ள 4.5 சென்ட் நிலம் எந்த பக்கம் உள்ளது என்றும்,

இரண்டாம் பிரதிவாதிக்கு உரிமையுள்ள 1 செண்ட் நிலம் எந்த பக்கம் உள்ளது என்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால், சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கு 1 செண்ட் நிலம் பாத்தியம் உள்ளதாக கூறிவிட்டு, இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கேட்டு தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. எனது தாயார் அவர் வழக்கு சொத்தில் இருந்து வருகிறார் என்பது உண்மை இல்லை என்றாலும், முதலாம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும், சரியல்ல. இந்தவழக்கில் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றாலும், சரியல்ல.

ஒப்பம் / பி.ராஜாமணி

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.